
# “வள்ளுவர் மறை வைரமுத்து உரை!”






**வா**ங்கிக்குவித்த எல்லாப்புத்தகங்களையும், இன்னும் வாசித்து விடவில்லை என்ற போதிலும், காணக் கிடைக்கிற அத்தனை புத்தகங்களிலும் அணிந்துரை முன்னுரை ஆகியவற்றை மட்டுமாவது வாசித்து விட வேண்டும் என்பது 40 வருட காலமாக நான் கடைப்பிடித்து வருகிற பழக்கம். மேலதிகமாக என் மனதளவில் சிறந்த அணிந்துரைகளையும் முன்னுரைகளையும் தனித்தனியாகச் சேர்த்து கோத்து வருவது என் சொந்த நூலகத்தில் 100% பின்பற்றுகிற நடைமுறை. அந்த அடிப்படையில் ஒன்று சொல்வேன்.

**தமிழில் எழுதப்பட்ட ஆகச் சிறந்த தன்னுரைகளில் ஒரு பத்தை மட்டும் தனியே பட்டியலிட்டால் அந்த வரிசையில் நிச்சயமாக வள்ளுவர் மறை வைரமுத்து உரை என்கிற நூலுக்கு தலைவாயில் தோரணமாக வைரமுத்து எழுதியிருக்கும் முன்னுரையைச் சொல்வேன். 12 பக்க அளவிலான அந்த உரையை மட்டும் கத்தரித்து ஒரு சிறு நூலாக்கி தமிழறிந்த யாவர்க்கும் அதை கொண்டு போய் சேர்ப்பதன் மூலம் திருக்குறளை நோக்கி ஒரு பெரும் மக்கட் பாய்ச்சலை மிகப் புதியதாக ஏற்படுத்திவிட முடியும். கல்விப்புலத்தில் இதனைச் செய்து பார்ப்பது இளையோர் மனங்களில் நல்லறிவு விளைச்சலை ஏற்படுத்தித் தரும்.**

திருக்குறள் எனைப் பொறுத்தவரையில் ஒரு அறவியல் ஆவணம். அதன் வயது நிஜம் ஆகவே அதனுள் உறைந்திருக்கும் அத்தனை சொற்களின் பயன்பாட்டுத் தொடக்கம் என்பது ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்தையது எனில் தமிழ் மொழியின் சொல் வளம் ஐயத்துக்கு இடமற்றது. வள்ளுவர் புழங்கிய சொற்களை மாத்திரம் எடுத்து அது கொண்டு வள்ளுவ அகராதி ஒன்றை தயாரித்து வைத்துக் கொண்டால் ஆயிரம் வருடங்களைத் தாண்டி வாழ்ந்து இன்னும் சிறந்து கொண்டிருக்கக் கூடிய எத்தனையோ சொற்களை நம்மால் அறிந்து கொள்ள முடியும். நான் வள்ளுவரை அவரது ஒவ்வொரு சொல்லாய் வியந்து வியந்து நயந்து நயந்து இருபது ஆண்டு காலத்துக்கு மேல் அடிக்கடி நுழைந்து திரும்புகிற பிடிவாதப் புத்தகமாகவே திருக்குறளைக் கருதுகிறேன்.

நூற்றுக்கணக்கான உரைநூல்கள் எழுதப்பட்ட பிறகும் இன்னமும் திருக்குறள் எனும் பெருமறை நூலுக்கான உரைகளுக்கான தேவை இருந்து கொண்டே தான் இருக்கிறது. காலப் பொருத்தம் என்பதை அடிப்படையாகக் கொண்டு பார்த்தோமேயானால், முன்னர் எழுதப்பட்ட உரை நூல்களை எல்லாம் அடித்தளங்களாகவும் ஆதாரங்களாகவும் கொண்டு, அந்தந்தக் காலத்தில் எழுதப்படுகிற உரை நூல்களை ஆழ்ந்தும் ஆய்ந்தும் பயன்படுத்துவதுதான் சரியான முறையாக இருக்கக் கூடும்.

காலம் எல்லாவற்றிலும் வளர்சிதை மாற்றங்களை உண்டு செய்வது போலத்தான் மொழியின் மேனியிலும் வினை புரிகிறது. அந்த வகையில் பெருஞ்சிறப்பு வாய்ந்தோர் பலரும் அவரவர் வாழ்ந்த காலத்தில், அவரவர் வந்து சேர்ந்திருக்கிற புரிதலையும் அடைதலையும் கருத்தில் கொண்டு குறளுக்கு உரையாற்றி உள்ளனர். தன் அகவையில் 60 ஆண்டுகளைக் குறள் மீதான காதலில் செலவழித்து இருக்கும் கவிஞர் ஏழு கடல் ஏழுமலை தாண்டித் தன் மனம் தளராமல் ஒருவன் வென்றெடுத்து திசை திரும்புகிற பெரும் செல்வம் என இந்த உரையை கண்டடைந்திருக்கிறார். வைரமுத்து எழுதியிருக்கும் வள்ளுவத்துக்கான இந்த உரையைக் காதலில் வென்ற பிறகும் காதல் இணையாள் வசம் கையளித்து விடாமல், தானே திரும்பத் திரும்ப படித்து லயித்துக் கிடக்கிற, இந்த உலகில் சிறந்த காதல் கடிதத்திற்கு ஒப்பாகச் சொல்வேன்.

வைரமுத்துவுக்கு எப்படி வாய்த்தது இத்தகையதொரு குறள் மனம்? இந்தக் கேள்வி நம்ப முடியாத வியப்பாக மாறி நூலெங்கும் படர்ந்து நிற்கிறது. மொழி அறிவும் தமிழ்ப் புலமையும் கொண்ட பலரும் குறளுக்குப் பொருள் கண்டு சொல்ல வேண்டும் என்று எண்ணத் தலைப்படுவது இயல்பே. அப்படித் தொடங்கிய பலரும் எண் அளவில் அதை முடித்து எண்ணத்தளவில் வேறு வேலைக்குள் நுழைந்து திளைப்பதும் நிகழ்வது தான். கவிஞர் வைரமுத்து தன் அகவையில் 60 ஆண்டுகளை இந்த ஒரு வேலைக்குள் செலவழித்திருக்கிறார் என்று சொல்வதை விடவும். இப்படியான ஒரு உரையை கடல் கடைந்து அமுதம் கண்டாற் போல் கண்டெடுத்திருக்கிறார் என்று சொல்லத்தகும் . எப்புறமும் சாராத நேர்தன்மை, வள்ளுவரைப் போலவே வைரமுத்துவிடத்திலும் சமரசமின்றி நிறைந்து தொனிப்பது நனிநிறை.

பல குறள்களுக்கு ஏற்கனவே நெடுங்காலமாக காணப்பட்டு, புழங்கி வருகிற பொருளுரைகளே போதுமானவையாக விளங்குகின்றன என்பது மறுதலிக்க முடியாத நிஜம். அம்மாதிரி குறள்களுக்குப் பொருள் தருகையில் கூறியது கூறலைத் தவிர்க்கும் முகமாக கவிஞர் மிகுந்த சொற் சிக்கனத்துடன் தனது உரையைக் கட்டமைத்து செல்கிறார். எளிதில் மனம் பதியும் வண்ணம் அவை மிளிர்கின்றன.

ஒரு தேர்ந்த எழுத்தாளன், எல்லா படைப்புகளையும் ஒரே போல் அணுகுவதில்லை. அப்படி அணுக முடியாது என்பது மொழி ஏற்படுத்தி வைத்திருக்கிற வடிவ வேலி. புனைவைப் படைக்கும் பொழுது தான் அறிந்த சொற்களை, பொருட்களை எல்லாம் வாரி வழங்குகிற தானவான் ஒருவனை போல் மொழியைக் கையாளுகிற ஒருவன், குறள் போன்ற காலம் கடந்த படைப்பு ஒன்றுக்கு உரை காணும் பொழுது, மிகுந்த சிக்கனவாதியாக இருந்தாக வேண்டியது கட்டாயம். கஞ்சனாகவும் இல்லாது, ஊதாரியாகவும் இறையாது, தான் பார்க்கிற பணி நிமித்தம் திரளான பணத் தாட்களைக் கையாளுகிற காசாளன் ஒருவனைப் போல் பற்றற்று செயல்படுகிறவனே சிறந்த உரையாளனாக விளங்க முடியும். அந்த இலக்கணத்துக்கு 100% பொருந்தி வருகிறது வள்ளுவர் மறை வைரமுத்து உரை.

இன்று கழகம் எனும் சொல்லுக்கு ஆயிரம் அர்த்தங்கள் உள்ளன என்ற போதும் ஆங்கிலத்தில் க்ளப் என்ற சொல்லை ஒவ்வொரு முறை கண் வருடும் போதும் அதை சூதாட்டத்தோடு பொருத்திப் பார்த்துக் கொள்வது பலருக்கும் பழக்கம்.

ஒற்றாடல் என்ற 59 ஆம் அதிகாரம்.

**சிறப்பறிய ஒற்றின்கண் செய்யற்க செய்யின்**
**புறப்படுத்தான் ஆகும் மறை.**

இதற்கான கவிஞரின் உரை ஈர்க்கிறது. “ஒரு அரசன் பிறர் யாரும் அறியாமல் ஒற்றர்களுக்குச் சிறப்புச் செய்ய வேண்டும். வெளிப்படச் செய்தால் மறைபொருளை அரசனே வெளிப்படுத்திய பழிக்கு ஆளாவான்” என்று பொருள் தருகிறார். இதில் இருக்கக்கூடிய பிறர் யாரும் அறியாமல் எனும் விதிமுறைதான் ஒரு அரசன் அரும்பாடுபட்டு பின்பற்ற வேண்டியது என்பது பெறப்படுகிறது. பொதுவாக அரசனை யாரும் அறியாமல் சந்திப்பது மிகுந்த சிரமத்துக்கு உட்பட்ட காரியம். அரசனே ஆனாலும் தான் நம்புகிற தன்னை நம்புகிற ஒற்றர்களை அவர்களும் ஒருவருக்கொருவர் அறிந்து விடாமல் ரகசியம் காத்து மிகத் தனியான முறைமையில் அவர்களைச் சந்தித்து, தகவல்களைப் பெற்று, அவர்களுக்கான சன்மானங்களை அளிக்க வேண்டும்” என்பதில் உறைந்து கிடக்கக்கூடிய உள்ளார்ந்த அர்த்தங்கள், எண்ண எண்ண விரிந்து கொண்டே செல்வது அழகு.

**பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்**
**கழகத்து காலை புகின்**

**என்ற குறளின் மூலமாக சூதாட்ட விடுதியை கழகம் என்று வரைகிறார். பழகிய செல்வமும் என்கிற சொல்லுக்கு எத்தனையோ அர்த்தங்கள்**


எழுத்தாளர் ஆத்மார்த்தி

**பொங்கிப் பெருகி வந்து கொண்டே இருக்கின்றன. சூதாட்டக் களத்திலேயே ஒருவனின் காலம் கழிந்து விடுமானால் அது அவன் செல்வத்தையும் பண்பையும் அழிக்கும் என்பது பொதுவாக பெரும்பாலான ஆசிரிய மக்கள் அளித்த உரைகளில் காணக்கூடியது. அத்தகைய களத்தில் ஒருவன் தன் இளமையைத் தொலைத்தால், அது அவன் குடும்ப சொத்தையும் பண்பையும் அழிக்கும் என்று கவிஞர் தந்திருக்கும் முறை போதுமானது மட்டுமின்றி பொருத்தமானதாகவும் தோன்றுகிறது.**

**இன்றைய காலம் நிகழ்நிலை சூதாட்டங்களில் ஈடுபட்டு, பணத்தையும் வாழ்வையும் இழந்து உயிரை மாய்த்துக் கொள்வோர் பலர். நமது மாநிலம் அப்படியான ஆட்டத்தை தடை செய்து சட்டம் இயற்றி இருக்கிறது. வள்ளுவரின் சமூகப் பற்று, எத்தகைய தீமையைக் காட்டிலும் சூதை, முதன்மையான இடத்தில் வைத்து எக்காலத்துக்கும் ஆன எச்சரித்தலை இயற்றி காட்டியதில் இருந்து நமக்குத் தெரிய வருகிறது.**

**சிறுமை பல செய்து சீர்அழிக்கும் சூதின்**
**வறுமை தருவதுஒன்று இல்**

இரண்டு சொற்களை “சீரழிக்கும்” எனச் சேர்த்துச் சொல்வதை இன்று வரை தினசரி புழக்கத்தில் அன்றாடத்தின் நெருக்கத்தில் வைத்திருக்கும் பலருக்கும், சீர் என்ற சொல்லுக்கு கோல எழில், அழகு, தோற்றம், செல்வம் என பல பொருட்கள் தோன்றி வரும். கவிஞர் இந்தக் குறளில் “ புகழையும் அழிக்கும்” என்று சொல்வதன் மூலமாக மேற்காணும் அத்துனை பொருட்களையும் சேர்த்து சொல்லத் தக்க பொருளொன்றைக் காணத்தருகிறார்.

இன்னொரு குறளில் வள்ளுவரின் மனக் கடல் ஆழம் வரைக்கும் சென்று திரும்பிய தமிழார்வ மீனாகவே மாறிப் பொருள் காண விழைகிற கவிஞரின் மொழித்தேடல் நன்கு புலப்படுகிறது.

**இறந்த வெகுளியின் தீதே சிறந்த**
**உவகை மகிழ்ச்சியின் சோர்வு.**

பொச்சாவாமை அதிகாரத்தில் முதற்குறள். இதற்கு செல்வம் மற்றும் வெற்றி ஆகியவற்றால் ஒருவனுக்கு ஏற்படும் களிப்பு அவனுக்கு தீமையை நேர்த்தி விடும்என்பதாகவே பலமுறை பொருள் காணப்பட்டுள்ளது. இதற்கு கவிஞர் தரும் விளக்கம் மிகுந்த நிறைவை தருகிறது. பெருஞ்செல்வத்தாலோ - பேரதிகாரத்தாலோ- பெரு வெற்றியாலோ ஒருவனுக்கு உண்டாகும் பெருமிதக் களிப்பினால் ஏற்படும் மறதி என்பது அளவு கடந்த சினத்தை விடத் தீமை தருவது என்று பொருள் காண்கிறார். தற்காலத்தில் அதிகாரம் எனும் சொல்லின் சமூகப் பயன்பாடு முன்பிருந்ததை விட பன்மடங்கு விரிந்து பேருருக் கொண்டு காணப்படுவது திண்ணம். முன்பு செல்வத்துக்குள்ளும் வெற்றிக்குள்ளும் மறைந்து கிடந்த அதிகாரம் எனும் பொருளை தனித்து தோன்றச் செய்த வகையில் கவிஞரின் கண்டடைதல் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

இப்போதிருப்பது பல்பரிமாண வாழ்முறை. இங்கே காட்சி ஊடகத்தின் செல்வாக்கு அளப்பரியது. இரண்டாயிரம் ஆண்டுக்கு முன் காலத்தேனை எடுத்து தற்கணத்தின் மீனை அதில் மிதக்க விடுவது சாகசமன்றி வேறெது? தற்கண மிளிர்வும் காட்சித் தெளிவுக் கலந்த முறைமையில் பல குறள்களுக்குப் பொருள் கண்டு விளக்குகிறார் கவிஞர்.

758 ஆவது குறள் அத்தகைய ஒன்று.

**குன்றுஏறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்துஒன்று**
**உண்டாகச் செய்வான் வினை**

இதற்கு சொல்லப்பட்டதிலேயே மிகச்சிறந்த உரை என்று கவிஞரின் விளக்கத்தை கொள்ள முடிகிறது. தன் கைப்பொருளை வைத்துக்கொண்டு, தொழில் தொடங்கும் ஒருவனின் செயலானது, குன்றின் மேல் ஏறி நின்று பள்ளத்தாக்கில் யானைப்போர் காண்பது போல் பாதுகாப்பானது. இந்தப் பொருளுரை வாசிக்கும் பொழுது குறளின் அர்த்தம் ஒரு காட்சியாகவே கண்முன் விரிகிறதல்லவா..? இத்தகைய விளக்கங்கள் பல்வேறு குறட்பாக்களுக்குக் கவிஞர் தந்து இந்த உரை நூலைச் செறிவுறச் செய்திருப்பது சிறப்பு.

குறள் 921:

**உட்கப் படாஅர் ஒளியிழப்பர் எஞ்ஞான்றும்**
**கட்காதல் கொண்டொழுகு வார்.**

என்று உள்ளது. இதற்கு, எப்போதும் கள்ளின் மீதே காதல் கொண்டு வாழ்கிறவர்கள். சமுதாயத்தால் மதிக்கப்பட மாட்டார்கள். இருக்கும் பெருமையையும் இழந்து விடுவார்கள் என்பது கவிஞர் வைரமுத்து தந்திருக்கும் விளக்கம். முன்னோர் பலர் உரை எழுதுகையில் கள் மீது விருப்பம், மதுப்பழக்கம், என்றெல்லாம் கட்காதல் எனும் பதத்துக்குப் பொருள் கண்டதை விடுத்து “கள்ளின் மீதே காதல்” என்கிற மூன்றே சொற்களைக் கொண்டு அத்தனை அர்த்தச் செறிவை ஏற்றித் தந்திருப்பது கவிஞரின் மொழி மாண்பு மட்டுமல்ல பொருள் நேயமும் எனச் சொல்லத் தகும்.

**பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்**
**கலந்தீமை யால்திரிந் தற்று**

இஃது ஆயிரமாவது திருக்குறள். இதற்குப் பொருள் காண்கையில் முன் ஜென்மத்து புண்ணியத்தால் பெற்ற செல்வம், பெரிய செல்வம், பரம்பரைச் செல்வம், என்றெல்லாம் பகுத்து அறிந்திருந்தனர் முன்னோர். இவற்றையெல்லாம் தொகுத்துச் சொல்வது போல், கவிஞர் “யார் வழியாகவோ பெற்ற பெரும் செல்வம்” என்று விளக்குகிறார். பாத்திரம் குறைபட பால் திரிந்தாற் போல் பண்பில்லாதவர் கைக்குக் கிட்டிய அத்தகைய செல்வம் எனும் பொழுது அர்த்தப் பூர்வ நிறைதலை அடைகிறது பொருள்.

படர் மெலிந்து இரங்கல் என்கிற 117 வது அதிகாரம். 1168 ஆவது எண்ணிக்கையிலான குறள்.

**மன்னுயிர் எல்லாம் துயிற்றி அளித்திரா**
**என்னல்லது இல்லை துணை**

இதற்கு கவிஞர் கண்டிருக்கும் பொருள், அதைச் சொன்ன விதம் அபாரம் என்று மெச்சத் தக்கதாய் இருக்கிறது. சுருங்கச் சொல்லுவதில் பலகாலத் தேர்ச்சி பெற்ற ஒருவரால் தான் இதற்கான பொருளை இப்படி தொடங்க முடியும் என்று கருதுகிறேன்.

இரண்டே சொற்கள்

“இரவு பாவம்; இரக்கத்திற்குரியது. உலகத்து உயிர்களை எல்லாம் உறங்கச் செய்து விடுகிறது. அது உறங்காதிருக்கிறது.

ஒரு குறுஞ்செய்திக்கு அனுமதிக்கப்படுகிற சிறு துண்டு இடத்தில், மாபெரும் காதல் காவியத்தை எழுதி வைத்திருப்பது வள்ளுவரின் மொழிமாயம் என்றால், அதற்கு அதே அளவு சொற் செலவில் பொருள் கண்டிருப்பது, வைரமுத்துவின் தமிழ்மழை.

தன்னைக் கடக்கையில் பிறப்பது ஞானம். தமிழென்னும் மூத்த மொழியின் ஆகச்சிறந்த அற்புதம் திருக்குறள். பன்னெடுங்காலத்தைக் கடந்து இன்னும் ஒளி குன்றாது சுடர்ந்து கொண்டிருக்கும் குறளெனும் உலகப் பொதுமறைக்குத் தன் உயிராழத்திலிருந்து பொருளுரை கண்டிருக்கும் கவிஞரின் இந்த நூல் மொழியெனும் அறிவாலயத்துக்குச் செய்யப்பட்ட மாபெரும் திருப்பணி.

**வள்ளுவர் குறளுக்குள் வைரமுத்துவின் கவிதை பாய்ந்து கலையாகிறது.**

**வாழ்தல் இனிது!**

## ‘திராவிட மாடல்’ அரசின் சிறப்புத் திட்டங்களால்

# மான்செஸ்டர் சிட்டியில் தகவல் தொழில்நுட்ப மாபெரும் புரட்சி!

## ரூ.3,465 கோடி முதலீடுகள் ஈர்ப்பு – லட்சக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்பு!

**சென்னை, ஆக. 12-**

**தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என அழைக்கப்படும் கோவை மாநகரம் பல்வேறு தொழில் துறைகளில் சிறந்து விளங்கி வரும் நிலையில், தற்போது ஐ.டி எனப்படும் தகவல் தொழில்நுட்ப துறையிலும் வேகமாக முன்னேறி வருகிறது. சென்னைக்கு அடுத்தபடியாக கோவையில் அதிக அளவிலான ஐ.டி. நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. குறிப்பாக, காக்னிசென்ட், ராபர்ட் பாஷ், டி.சி.எஸ், இன்போசிஸ், புரோட்டிவிட்டி உள்ளிட்ட முன்னணி நிறுவனங்கள் உள்பட 700க்கும் மேற்பட்ட ஐ.டி. நிறுவனங்கள் கோவையில் கால் பதித்துள்ளன.**

மேலும், ஆண்டுதோறும் ஐ.டி நிறுவனங்களின் வரத்து எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. தமிழ்நாடு அரசு அளித்து வரும் ஊக்கம் காரணமாக, பல்வேறு முன்னணி நிறுவனங்கள் தங்களின் அலுவலகங்களை கோவையில் அமைக்க ஆர்வம் காட்டி வருகின்றன. கோவை மாவட்டத்தில் இதுவரை அரசின் எல்காட் அமைப்பில் பதிவு செய்து 78 ஐ.டி. நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இதில், 24 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

எல்காட் அமைப்பு சார்பில் கடந்த 2010ம் ஆண்டில் சிறப்பு பொருளாதார மண்டல திட்டத்தின்கீழ் பீளமேடு பகுதியில் 17 லட்சம் சதுரடி பரப்பளவில் டைடல் பார்க் அமைக்கப்பட்டது. இதனை அப்போதைய முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி திறந்து வைத்தார். இதில், உலகின் பல பெரிய முன்னணி ஐ.டி நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இதன் அருகே 2.60 லட்சம் சதுரடியில் ஐ.டி டவர் அமைக்கும் பணியும் நடைபெற்று வருகிறது. இதேபோல், விளாங்குறிச்சி பகுதியில் சிறப்பு பொருளாதார மண்டல திட்டத்தின்கீழ் 61 ஏக்கரில் ரூ.217 கோடி மதிப்பீட்டில் கடந்த 2008ம் ஆண்டு தகவல் தொழில்நுட்ப பூங்கா அமைக்கப்பட்டது.

இங்கு, விப்ரோ, ஹெச்.சி.எல். உள்ளிட்ட பல்வேறு முன்னணி ஐடி நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இதுமட்டுமின்றி, சரவணம்பட்டி, விளாங்குறிச்சி, காளப்பட்டி, பொள்ளாச்சி சாலை உள்ளிட்ட பகுதிகளில் தனியார் ஐ.டி பூங்காக்கள் இயங்கி வருகின்றன. இதில், நேரடியாக சுமார் 48 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்களும், மறைமுகமாக 1 லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களும் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தும் நோக்கில், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த தொழில்களை பெருக்குவதில் தமிழ்நாடு அரசு சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது.



இதன் ஒரு பகுதியாக, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில் விளாங்குறிச்சி பகுதியில் தொழில்நுட்ப சிறப்பு பொருளாதார மண்டல வளாகத்தில் ரூ.158.32 கோடி மதிப்பில் 2.86 ஏக்கர் பரப்பளவில் மேலும் ஒரு டைடல் பார்க் அமைக்கப்பட்டது. 2.94 லட்சம் சதுரடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. இது, இரண்டு அடித்தளங்களில் வாகனங்கள் நிறுத்துமிடம், தரை மற்றும் 5 மேல்தளங்களில் தகவல் தொழில்நுட்ப தொழில்களுக்கான இட வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

இதை, கடந்த நவம்பர் மாதம் கோவைக்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இக்கட்டிடத்தில் பல்வேறு முன்னணி தொழில் நிறுவனங்களுக்கு இட ஒதுக்கீடு ஆணைகளையும் வழங்கினார். இதில் பல்வேறு நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இதனால் சுமார் 3,500 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. மேலும், கோவையில் 17.17 ஏக்கர் பரப்பளவில் மேலும் ஒரு தகவல் தொழில்நுட்ப பூங்கா 30 லட்சம் சதுரடி பரப்பளவில் அமைக்கப்படும் எனவும், இதன்மூலம் 36 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் எனவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

இதேபோல், தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கையில் ரூ.1,100 கோடி செலவில் 20 லட்சம் சதுரடியில் ஐ.டி. பார்க் அமைக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது. இந்த தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இதேபோல், பல்வேறு தனியார் ஐடி பூங்காக்கள் அமைக்கும் பணிகளும் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. தமிழ்நாடு அரசு, செயல்படுத்தி வரும் திட்டங்கள் மற்றும் ஊக்குவிப்பு காரணமாக கோவையில் தகவல் தொழில்நுட்ப துறை அபரிமிதமான வளர்ச்சியை அடைந்து வருகிறது.

*** கோவையில் முன்னணி நிறுவனங்கள் உள்பட 700க்கும் மேற்பட்ட ஐ.டி. நிறுவனங்கள் கால் பதித்துள்ளன.**

*** தமிழ்நாடு அரசு அளித்து வரும் ஊக்கம் காரணமாக, பல்வேறு முன்னணி நிறுவனங்கள் தங்களின் அலுவலகங்களை கோவையில் அமைக்க ஆர்வம் காட்டி வருகின்றன.**

*** பெங்களூருவில் நிலவும் போக்குவரத்து நெரிசல் மற்றும் மழைக் காலங்களில் தேங்கும் தண்ணீரால் அங்குள்ள ஐ.டி. நிறுவனங்கள் கோவைக்கு இடம் பெயர்ந்து வருகின்றன.**

*** கோவையில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்ப சேவைகள் துறை ரூ.1,709 கோடி முதலீடுகளையும், மின்னணு துறை ரூ.1,756.39 கோடி முதலீடுகளையும் ஈர்த்துள்ளது.**

கோவையில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்ப சேவைகள் துறை ரூ.1,709 கோடி முதலீடுகளையும், மின்னணு துறை ரூ.1,756.39 கோடி முதலீடுகளையும் ஈர்த்துள்ளது. இது, கோவை டிஜிட்டல் மற்றும் மின்னணு புதுமை மையமாக உருவெடுத்து வருவதை பிரதிபலிக்கும் வகையில் உள்ளது. இது, பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்காற்றுவதுடன், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளையும் வழங்கி வருகிறது.

இந்த திட்டங்கள் மூலம் சென்னை, பெங்களூரு போன்ற பெருநகரங்களுக்கு இணையாக இனி கோவையும் மிளிர வாய்ப்பு உள்ளது. இனி, கோவை இளைஞர்கள் வேலைவாய்ப்புக்காக வெளிமாநிலங்களுக்கு செல்ல தேவையில்லை. தற்போது, பெங்களூருவில் நிலவும் போக்குவரத்து நெரிசல் மற்றும் மழைக் காலங்களில் தேங்கும் தண்ணீரால் அங்குள்ள ஐடி நிறுவனங்கள் கோவைக்கு இடம் பெயர்ந்து வருகின்றன. ஐ.டி. துறையின் எதிர்கால வளர்ச்சியை கருத்தில்கொண்டு கோவை மாநகரின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் தொழில்துறையினர் வலியுறுத்தி உள்ளனர்.

- நன்றி ‘**தினகரன்**’
11.8.2025

### 2ம், 3ம் நிலை நகரங்களில் மினி டைடல் பூங்கா அமைக்கும் பணி தீவிரம்!

**தமிழ்நாடு அரசு தொழில் வளர்ச்சி கழகம் (டிட்கோ) மற்றும் தமிழ்நாடு மின்னணுவியல் கழகம் (எல்காட்) இணைந்து நிர்வகிக்கும் அமைப்பு என்பதால், இவ்விரு ஆங்கில பெயர்களை இணைத்து, சுருக்கமாக டைடல் பார்க் என அழைக்கப்படுகிறது.**

**தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியை ஊக்குவிக்கவும், புத்தொழில்களை ஆதரிக்கவும், வேலை வாய்ப்பை உருவாக்கவும் டைடல் நியோ லிமிடெட் என்ற சிறப்பு நோக்க நிறுவனத்தின் மூலம் இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில், 50,000 சதுர அடி முதல் 1,00,000 சதுர அடி கட்டுமான பரப்பளவுடன் மினி டைடல் பூங்காக்களை அமைக்க அரசு முடிவெடுத்தது.**

**அதன்படி, விழுப்புரம், திருப்பூர், வேலூர், தூத்துக்குடி, தஞ்சாவூர் மற்றும் சேலத்தில் மினி டைடல் பூங்காக்கள் அமைப்பதற்கு முதல்வரால் அடிக்கல் நாட்டப்பட்டது. அவற்றில் கட்டுமானப் பணிகள் நிறைவுபெற்று விழுப்புரம், தஞ்சாவூர், சேலம், தூத்துக்குடியில் மினி டைடல் பூங்கா முதல்வரால் திறந்து வைக்கப்பட்டன. திருப்பூர், வேலூர் மற்றும் காரைக்குடி மினி டைடல் பூங்காக்களின் கட்டுமான பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.**

**இவை விரைவில் செயல்பட துவங்கும். மேலும், நாமக்கல் மாவட்டம், ராசிபுரத்தில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கான வடிவமைப்பு பணிகள் முடிவுற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. விரைவில் இதற்கான பணிகள் தொடங்கப்படவுள்ளது. இந்த சூழலில், கடந்த 1ம் தேதி திருவண்ணாமலையில் ரூ.37 கோடி செலவில் 63,200 சதுர அடியில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.**

**இதன் மூலம் 600 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.**

**இந்த மினி டைடல் பூங்காக்கள் மூலம் அப்பகுதிகளில் வசித்துவரும் பல்லாயிரக்கணக்கான படித்த இளைஞர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு அவர்கள் வசித்துவரும் மாவட்டங்களிலேயே தங்கி, தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பணிகளில் வேலை பெறுவதற்கான வாய்ப்பு ஏற்படுவதுடன், அப்பகுதிகள் சமூக பொருளாதார வளர்ச்சியடையவும், மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சி மேம்படவும் வழிவகுக்கும்.**